வித்துவான்

க.கதிரேசன் எம்.ஏ.,பி.எட்.,

இந்நூலின் உரையாசிரியர் வித்துவான் க.கதிரேசன், எம்.ஏ.,பி.எட்., திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் (1955-59) பயின்றவர். 1958ல் சென்னை மாணவர் மன்றம், காரைக்குடி திருக்குறள் கழகம் நடத்திய மாநில, கல்லூரி கவிதைப் போட்டிகளில் முறையே 4ஆம், 3ஆம் பரிசு பெற்றவர். 1959-1994 வரை குன்றக்குடி ஆதீனத்துக் குன்றக்குடி த.க.கு.மே.பள்ளியில் தமிழாசிரியர் பணி, 1994-2000 வரை பிள்ளையார்பட்டி வேதசிவாகமபாடசாலையில் சாத்திரம், திருக்குறள், திருமுறையாசிரியர்.

27.03.1994 "குன்றக்குடி ஆதீனப் புலவர்" ஆக்குதல், 02.10.2006ல் "சைவத்தமிழ்மணி" விருது, 16.08.2009ல் "சித்தாந்தச் செல்வர்" விருது பெறுதல்.

வெளியிட்ட நூல்கள் – உரை நூல்கள்: ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் நான்மணிமாலை, இவர் மீதிலான சிற்சுருமாலை; அருள்தரு வீரமாகாளி அம்மன் பாமாலை, அருள்தரு சண்முகநாதப் பெருமான் பாராயணப் பாமாலை, அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கை மாலை, சிங்கைக் சிலேடை வெண்பா, போற்றி மடக்குப் பதிகம், பாம்பன் சுவாமிகளின் குன்றக்குடிப் பதிகம், பூவாளூர்த் தலப்புராணம், தொகுப்பு: விநாயகர், முருகன், அம்மை, அப்பன் மீது அருளாளர் வாக்கால் 1008 போற்றி, திருக்கோயில் வழிபாடு, கவிதை: அருள்தரு கற்பக விநாயகர் பதிகம், அருள்தரு சண்முக நாதப் பெருமான் மாத, வார பதிகங்கள், அருள்தரு குங்குமசுந்தரி அம்மைபதிகம், அருள்தரு வீரமாகாளி அம்மைபதிகம், கல்லூரிப் பாடநூலாகவும், எம்.ஃபில், ஆய்வேடாகவும் அமைந்த "நெஞ்சுவிடுதூது". நினைவு மலர்கள்: தோகூர்ப் பண்ணை மு.சுப்பிரமணியன் செட்டியார், இளக்காரியக்காரர் அ.ந.சம்பந்தஞ் செட்டியார் மீதில். கட்டுரைகள்: அருள்நெறித்தந்தை குன்றக்குடி அடிகளார் அவர்களின் வரலாறு கூறும் "காலமாய் நிற்கும் காட்சி", இதழ்களில் கருத்தரங்கங்களில் இடம்பெற்ற கட்டுரைகள்.

தொடர் கட்டுரைகள்: ஸ்ரீ குமரகுருபரர் அடிச்சுவட்டில் தன் முன்னேற்றக் கருத்துகள், ஸ்ரீ குமரகுருபரர் அருந்தமிழில் சைவ சித்தாந்தம்.

படித்தல், எழுதுதல் மட்டுமேபணி.

ஆண்டருள் பதிகங்கள்

-: நூலாசிரியர் :-

மதுரகவி ஆண்டவர்

-: உரைவிளக்கம் :-

ஆதீனப்புலவர் **க.கதிரேசன்**

குன்றக்குடி
அருள்தரு சண்முகநாதப்பெருமான்
மீது மதுரகவி ஆண்டவரின்
ஆண்டருள் பதிகம்

வெளியிடுகின்றவர்கள்
திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை
ஆதீனகர்த்தர்(46)
திருப்பெருந்திருதெய்வசிகாமணி
பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள்

நாள்: 13.6.2011

உரை:
குன்றக்குடி ஆதீனப்புலவர். சைவத்தமிழ்மணி. சித்தாந்தச் செல்வர்
வித்துவான் க.கதிரேசன் எம்.ஏ., பி.எட்.,
பூவாளூர்-621 712.

வெளியீடு:
திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கம்
திருத்தவத்துறை-621 601.

பதிப்புரிமை: குன்றக்குடி ஆதீனத்திற்கே விலை: ரூ. 10/-

உள்ளுறை

		பக்கம்
1.	அருளாசி தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்	1
2.	அணிந்துரை புலவர். புவியரசு, B.Lit. அவர்கள்	3
3.	தோரணவாயில்	4
4.	நூல் ஆண்டருள் என வேண்டுதல் பதிகங்கள்	7
5.	செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல்	29

உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி-630 206
சிவகங்கை மாவட்டம்
போன்: 04577-264227

நாள்: 03-04-2011

வாழ்த்துரை

நம் குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளி உயிர்களுக்கெல்லாம் திருவருளை வாரிவழங்கிக் கொண்டிருக்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்குப் பாமாலை சூட்டிய அருட் கவிஞர் பலராவர். சந்தக்கவிமழை பொழிந்த அருணகிரிநாதர், அருள்திரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் எனப் பாமாலை சூட்டியோர் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இந்த வரிசையில் வந்த அருட்கவிஞர்தான் மதுரகவி ஆண்டவன் சுவாமிகள் எனப் போற்றப்படும் முத்தையாப்பாவலர் அவர்கள். இந்த அருள்கவிஞர் மயூரகிரி சண்முகப் பிரபந்தம் என்ற பதினெட்டு நூல்களைக் கொண்டதொரு தொகைநூலை இயற்றிக் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருவடிகளுக்குச் சூட்டியுள்ளார். இப்பிரபந்தப் பாடல்கள் அனைத்தும் பாடுவோர் நெஞ்சைப் பரவசப்படுத்துபவை; ஏறுமயில் வாகனன் திருவருளுக்குப் பாத்திரமாக்குபவை. இந்தப் பதினெட்டு நூல்களில் ஒன்று "ஆண்டருள் பதிகம்" என்னும் நூல். இந்த நூல் மூன்று பதிகங்களை உள்ளடக்கியதாகும்.

இந்த அருமையான நூலுக்கு நமது குன்றக்குடி ஆதீனப் புலவர், வித்துவான் திரு.க.கதிரேசன் அவர்கள் குறிப்புரையும், பொழிப்புரையும் எழுதியுள்ளார். வித்துவான் க.கதிரேசன் அவர்கள் இலக்கண இலக்கியங்களில் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்; அருள்நூல்களில் பலகாலும் தோய்ந்த பயிற்சி உடையவர்; பழுத்த தமிழ்ப்புலமையர். குன்றக்குடியில் எழுந்தருளி இருக்கும் அருள்தரு சண்முகநாதன்

திருவடியை எண்ணி எண்ணித் தொழுதுவரும் இனியபேரன்பர். அருள் நூல்கள் பலவற்றுக்கு உரைகண்ட உரையாசிரியர். இத்தகைய பெருமகனார் இந்த ஆண்டருள் பதிக நூலுக்கு உரை எழுதியிருப்பது முருகன் அன்பர்களுக்கு நற்பேறாகும். இப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ள நமது ஆதீனப் புலவர் க.கதிரேசன் அவர்களுக்கு உளமார்ந்த பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

ஆண்டருள் பதிகத்தைப் பொருள் உணர்ந்து ஓதி ஓதி, குன்றக்குடி ஆறுமுகப் பெருமானின் திருவருளைப் பெற்று அனைவரும் உய்தி பெறுவோமாக.

என்றும் வேண்டும் இனிய அன்புடன்,
பொன்னம்பல அடிகளார்

பெறுநர்
ஆதீனப்புலவர்
வித்துவான் திரு.க.கதிரேசன் அவர்கள்,
"பழனிமுருகன் இல்லம்"
அரியலூர்ச் சாலை,
பூவாளூர் - 621 712.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

அணிந்துரை

புலவர் புவியரசு. பி.லிட்.
செயலாளர்,
திருத்தவத்துறைத் தமிழ்ச்சங்கம்,
திருத்தவத்துறை (இலால்குடி).
அஞ்சல் எண்: 621 601.

அருந்தமிழ்ப் புலவோர் பெரும்பயன் நூல்களை யாத்து நறுந்தமிழ் மொழிக்கு வளமும் நலமும் சேர்த்துள்ளனர். அருளாளர்கள் தெய்வ மணம் கமழும் பனுவல்களை அருளியுள்ளனர்.

ஆன்ற தமிழ்ப் புலவர் நூல்கள், மொழியை வளப்படுத்துவதுடன் பயில்வோரையும் வளப்படுத்தி நலப்படுத்தி வாழ்வாங்கு வாழச்செய்யும் தகையனவாகும்.

அருளாளர் பனுவல்கள் படிக்கும்போது இறையருளைப் பெறச் செய்யும்; பயிலும்போது இறைவனை நெருங்கச் செய்யும்; தோயும்போது உள்ளத்தை இறைவனோடு ஒன்றுவிக்கும்.

அத்தகைய பனுவல்கள் தாம் மதுரகவி ஆண்டவர் குன்றக்குடி அருள்தரு சண்முகநாதர்மீது பாடியவை ஆகும். அவர் அருளிய பனுவல்களுள் ஆண்டருள் பதிகம் என்னும் பெயரில் மூன்று பதிகங்களை நமக்குத் தந்துள்ளார் குன்றக்குடி ஆதீனப்புலவர் வித்துவான் க.கதிரேசனார் அவர்கள்.

வித்துவான் க.கதிரேசனாரின் குருதியோடு கலந்தவை சமயமும் தமிழும். மிக்க அடக்கமானவர்; ஆழ்ந்த புலமையர். அவர், பழைய உருவில் இருந்த பாக்களை யாப்பமைதி குன்றாமல் சந்தி பிரித்துப் படிப்பதற்கு எளிதாக்கித் தருகிறார். அதன் அரிய கருத்துக்களைப் பொழிப்புரை மூலம் தெளியச் செய்கிறார்; குறிப்புரைகள் வழியே அதன் நுண்பொருள்களை நுகரச் செய்கிறார்.

அன்பர்கள், மறைமொழியாகும் இப்பனுவல்களைப் பயின்று உயர்நலம் பெறுதல் வேண்டும் என்பதே நம் அவா.

மயூரகிரி அமர் மயிலவன் வித்துவான் க.கதிரேசனார் அவர்களுக்கு நலமும் வளமும் மிக்க நீள் ஆயுளையும் தந்து அவர் மென்மேலும் சிறக்க அருள்புரியவேண்டுகிறேன்.

திருத்தவத்துறை (இலால்குடி)
16.3.2011.

புவியரசு

உ

தோரணவாயில்

அடியார்கள் வாழ்வாக விளங்கும் ஆறுமுக அப்பன் - அருள்தரு சண்முகநாதப்பெருமான், குன்றிலுயர் குன்றக்குடித் திருத்தலத்தில் வற்றாத திருவருளை வாரி வழங்கும் வள்ளலாக, நம் இருதாயராகிய அருள்தரு வள்ளிநாச்சியார் (இச்சை) அருள்தரு தெய்வயானை யம்மையார் (செயல்) ஆகிய இருவரும் தனித்தனிமயில் ஏறிப் புடைசூழ, தான் 'வாசி' எனும் மயிலேறி ஞானவேல் ஏந்தி வீற்றிருக்கின்றான். அன்று முதல் இன்றுவரை இப்பெருமான் அருளிவரும் திருவிளையாடல்கள்-அருளிப்பாடுகள் எண்ணிலடங்கா.

வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இப்பெருமான், தன் அடியார்களிடம் வேண்டிப் பெறும் பெருவிருப்பம் உடையவன் என்பது வரலாறு கூறும் உண்மை. இதற்குச் சான்றாக விளங்குவதே **"ஸ்ரீ மயூரகிரி சண்முகப் பிரபந்தம்"** என்ற அரிய பதினெட்டு நூல்களின் தொகுப்பு.

இன்றைய தேவகோட்டைக்கு மேற்பால் உள்ளது. வேப்பங்குளம் என்ற திருவூர். இவ்வூரவரான அறவோர் சோணைமுத்து அம்பலகாரர். இவரது திருமகன் முத்தையப் பாவலர். இவரது கனவில் குன்றக்குடி அருள்தரு சண்முக நாதப்பெருமான் எழுந்தருளி,

"....

புத்திர நமதருள் புரிந்தனம் உமக்கு
நம்பராக் கிரம நயமதை விமரிசை
சம்பிர மத்துடன் சண்முகப் பிரபந்
தம்ஒன்று பாடுக தனயா"

என்று அருள எழுந்ததே இம் மயூரகிரி சண்முகப்பிரபந்தம். இந்நூல் 18 நூல்களைத் தம்முட்கொண்டதொரு தொகை நூல். அவை மயூரகிரி குமரகுருபரக் கடவுள், திருவிளையாடல், பால்யத் திருவிளையாடல், பராக்கிரமம், ஆண்டருள் என வேண்டுதல் ஆகிய பதிகங்களுடன் மாதப்பதிகம், வாரப்பதிகம், போற்றி மடக்குப் பதிகம், சரணப்பத்து, சந்தவருகைப் பதிகம், மயூரகிரி முருகன் அநுபூதி, மயூரகிரி அந்தாதி, ஸ்ரீமயூரகிரி சுப்பிரமணியர் மீது வெண்பாமாலை, அத்துவித பஞ்சரத்ன வெண்பா, எக்காலக்கண்ணி, ஸ்ரீமயூரகிரி திருப்புகழ், நாமாவளி, கீர்த்தனைகள், வாழிசந்த விருத்தம் என்பன. இவையனைத்தும் வெண்பா, சந்தப்பா, கீர்த்தனம், ஆசிரியப்பா, கலித்துறை, கண்ணி, திருப்புகழ்ச் சந்தம், இந்துஸ்தானி மெட்டு, புதுச்சந்தவகை முதலியவற்றால் அமைந்து திருவருளை வழங்குகின்றன. இவற்றுடன் **"சிதம்பரம் ஸ்ரீநடராசர் மீது இயற்றிய நடனப்பதிகமும்"** இத்தொகை நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்நூல்களுக்கு மகிழ்ந்த குன்றக்குடியான் மீண்டும் இவர்கனவில் தோன்றி, **"மதுரகவி"** என்ற காரணப்பெயர் கொண்ட பட்டமும் வழங்கினான். இச்செய்திகள் அனைத்தையும், இந்நூலுக்குச் சாத்துக்கவிகள் தந்துள்ள மதுரகவி பெ.பெருமாள் ஆசாரியார், அருட்கவி ம.கா.செய்க்கப்துல் காதிறு, மகுமுது முத்துப் பாவாப் புலவர்; மு.முத்துவயிரக் கவிஞர் ஆகியோர் கவிதைகள் வழங்கியுள்ளன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேர 1913இல் மு.கரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதன் முதலாக அச்சிட்டு வழங்கியுள்ளார்.

தற்போது அருமையான, **"ஆண்டருள் என வேண்டுதல்"** பதிகங்கள் (மூன்று) மட்டும், எழுத்துப்பிழை களைந்து, சந்தி பிரித்து,

குறிப்புரை, பொழிப்புரை, இன்றியமையா இலக்கணக்குறிப்பு ஆகியவற்றுடன் வெளிவருகிறது.

எனது பிறநூல்களுக்கு வழங்கியுள்ளது போலவே, இந்நூலுக்கும் பணிச்சுமைகளுக்கிடையே தமது அருளார்ந்த வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் குருமகாசந்நிதானம் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய திருப்பெருந்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளை மனம் மொழி மெய்யால் வணங்கி மகிழ்கிறேன்.

திருவருளும் குருவருளும் கூட்டுவிக்குமானால் குன்றக்குடிப்பெருமான் நூல்களனைத்தையும் இவ்வகையில் வெளியிட ஆவல். அணிந்துரை வழங்கியுள்ள திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கத்து நிறுவுநரும் செயலாளரும் ஆகிய **புலவர்.புவியரசு,**பி.லிட் அவர்களுக்கும் திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கத்தலைவர் ஆகிய **பெரும்புலவர் ப.அரங்கசாமி** ஐயா அவர்கட்கும் திருத்தவத்துறைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கும் என் கனிவான நன்றி, வணக்கம்.

இதனைச் சிறந்த முறையில் அச்சிட்டுள்ள **விடெக் கம்ப்யூட்டர்ஸ்,** உத்தமர் கோவில் அச்சகத்தாருக்கு என் நன்றியுரியது. வணக்கம்.

பூவாளூர்.
10.4.2011.

பணிவன்புள்ள,
க.கதிரேசன்

ஆண்டருள் என வேண்டுதல் பதிகங்கள்

1. **உய்யும்வழி எனக்கு ரைப்பாய் ஓங்காரப் பிரணவமே**
உன்னை அல்லால்
செய்யும்வகை நானறியேன் சிதம்பரத்தின் தனிப்பொருளின்
சேயே முத்தர்
மெய்அணியும் திருநீற்றின் இலக்கான வித்தகன்என
வேதாய் ஈறாறு
கையுடைய மெய்ப்பொருளே கருத்தினைநீ விரித்துரைப்பாய்
கருணைப் பேறே

குறிப்புரை: பிரணவம் - அழியாப் பொருள். சேயே - திருமகனே செய்யும் வகை - வழிபடும் வகை. இலக்கு - குறிப்பொருள். வித்தகன் - ஞானவடிவன். வேதாய் - கடவுளே. கருத்தினை - என்னை ஆளும் உன் திருவுளத்தை. கருணைப் பேறே - நின் கருணையால் பெறப்படும் பொருளே.

பொழிப்புரை: ஓங்கார வடிவாய் விளங்கும் அழியாப் பொருளே; உன்னைத்தவிர, பிறரை வணங்கும் வகையறியேன்; தில்லைச் சிதம்பரத்தில் உள்ள ஒப்பற்ற சிவத்தின் திருமகனே; முத்தர்கள் தம் உடம்பில் பூசிமகிழும் திருநீற்றின் குறிப்பொருளாய் விளங்கும் ஞானவடிவன் எனப்பெறும் கடவுளே, பன்னிருகைகளையுடைய உண்மையான செல்வமே; உன் கருணையால் பெறப்படும் பொருளாக உள்ளவனே; என்னைக் கடைத்தேற்ற உள்ள உன் திருவுளக் குறிப்பை நீ எனக்கு விரித்து உரைத்தருள்வாயாக. -1

2. **கருணைவா ரிதியான கற்பகமே கற்பகத்தின்**
நிழலே கங்குல்
அருணையாம் அதைஒழிக்க அழல் உருவாய் அன்றுஅமர்ந்த

அரனார் மைந்த
தருணம்இது நான்மெலிந்தேன் தளராதே என்றணைத்துத்
தனித்துக் கூட்டி
அருணகிரி தனக்களித்த அருள்வாக்கை எனக் களிப்பாய்
அமரர் வேந்தே.

குறிப்புரை: வாரிதி – கடல், நிழல் – சோதி – ஒளி. கங்குல் – இருள் – ஆணவம். கங்குல் அதை ஒழிக்க அருணையாம் அழல் உரு என்று கூட்டுக. அருணை – செவ்வொளி. அமர்ந்த – பொலிந்த. தனித்து – ஒப்பற்ற வகையில்.

பொழிப்புரை: தேவர்களுக்கெல்லாம் பேரரசே; கருணைக்கடலாக விளங்கும் கற்பகமே; கற்பகத்தின் சோதிவடிவனே; ஆணவ இருளை ஒழிக்க வந்த செம்மைநிறம் வாய்ந்த அழல் வடிவமாக முன்நாளில் திருமால் நான்முகன் ஆகிய இருவர்க்கும் பொலிந்த சிவபரம்பொருளின் மகனே; நான் உளம் மெலிந்தேன்; என்னை நீ காத்தருளத் தக்க நேரம் இது; மனம் தளராதே என்று எனக்கு அருளி; என்னை உன்னோடு அணைத்துக் கொண்டு; ஒப்பற்ற வகையில் உன்னோடு என்னைச் சேர்த்துக்கொண்டு; அருணகிரிநாதர்க்கு நீ அளித்த அருள்வாக்கை – உபதேசத்தை எனக்கும் அளித்தருள்க. -2

3. வேந்தனே மேலான விண்ணவர்கள் நாடு கின்ற
வித்த ஞான
காந்தனே நெறியுடைய சர்ச்சனர்கள் இருதயத்தில்
தனித்து வாழும்
பாந்தனே பக்குவத்தில் எனையழைத்துப் பான்மைநெறி
பகர வேண்டித்
தாந்தனே தமியனிடர் தீர்த்துனது தாளடியைத்
தருகு வாயே.

குறிப்புரை: வித்தம் – பொருள்; இதன் விளி – வித்த – பொருளே. காந்தன் – எப்பொருட்கும் இறைவன். சர்ச்சனர்கள் – மனத்துள் எழுதிக் காண்போர். தனித்து – ஒப்பற்ற வகையில். பாந்தன் – இணக்கமானவன். பான்மை நெறி – தக்கவழி. தாந்தன் – சாத்வீக குணம் – நற்குணமுடையான்; தாள் அடி – திருவடிக்கீழ்

பொழிப்புரை: அரசே; மேலான தேவர்கள் அனைவரும் விரும்பி வாழ்கின்ற பொருளே. ஞானவடிவனாய் எப்பொருட்கும் இறைவனானவனே; நன்னெறியில் ஒழுகித் தமது மனத்தில் எழுதிக் காண்போர் இருதயத்தில் ஒப்பற்றவகையில் வாழ்கின்ற இணக்கமானவனே; நற்குணங்களே ஒருருவானவனே; உன்னையன்றிப் பிறர் ஆதரவற்ற என்னை அழைத்துத் துன்பம் தீர்த்துப் பக்குவநிலை கூறியருளி உன் திருவடிக்கீழ் இருத்தியருள்க – பிறவாப் பேரின்ப நிலை அருள்க. -3

4. மெய்எலாம் பத்தரை மாற்றுள்ள திருமேனியாய்
விளங்கும் உன்றன்
கைஎலாம் ஒளிதிகழும் ரெத்தினமாம் ஏழைஎன்மேல்
கருணை யானால்
செய்யலாம் ஓர்உதவி செய்வதானால் குறையுண்டோ
செந்தில் வாழ்வில்
உய்யலாம் எனநினைத்தேன் உன்கருத்தைப் பேதைஎனக்கு
உரைத்தி டாயே

குறிப்புரை: ஏழை – பேதை – அறிவற்றவன். செந்தில் வாழ்வில் – திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ள உனது திருவருளில்.

பொழிப்புரை:திருமேனி முழுதும் மிக உயர்ந்த பொன்னார் மேனியாய் விளங்கும் உனது பன்னிரு திருக்கைகளும் ஒளிவீசும் இரத்தினங்களாகும். அறிவற்ற என் மீது உனக்குக் கருணை உண்டு;

அது உண்மையானால்; நீ எனக்கு ஓர்உதவி செய்யலாம்; அப்படிச் செய்வதனால் உனக்கு எக்குறையும் இல்லை. திருச்செந்தூரிலும் எழுந்தருளியுள்ள உனது திருவருளில் நான் கடைத்தேறலாம் என்று எண்ணியுள்ளேன்; அறிவற்ற எனக்கு நீ அருள உள்ள உன் கருத்தைக் கூறுக. -4

5. அந்தரமாம் புவிமுதலாய் அறுமுகத்தோன் ஒருவன் என
அடியார் போற்றும்
மந்திரமாம் பிரணவத்தின் வடிவான மணிமன்றில்
மவுன யோகச்
சுந்தரமாம் சுயரூபா சுத்தநிலை எனக்குரைத்துத்
துயர்கள் தீரத்
தந்திரமாய் ஒருமார்க்கம் சாற்றுவாய் சண்முகனே
தயங்கி னேனே.

குறிப்புரை: அந்தரம்-வானுலகம். ஒருவன் - ஒருவனே. மணிமன்று-, அழகியவெளி, மவுனயோகம், மோனநிலையில் ஒன்றிய. சுந்தரமாம் - அழகுடையதாய் விளங்கும். சுத்தநிலை - தூயநிலை. சுயரூபா - உண்மை வடிவமாகிய ஞானவடிவனே. தந்திரம் - எளிமையான - சுளுவான. தயங்கினேன் - தத்தளித்தேன்.

பொழிப்புரை: இப்புவி முதல் வானுலகம் ஈறாகக் காக்கும் ஒப்பற்றவன் ஆறுதிருமுகம் கொண்ட இவன் ஒருவனே என்று அடியார் எல்லாரும் போற்றும் மந்திரமாகிய பிரணவத்தின் வடிவாக விளங்கும் அழகிய வெளியில் மோனநிலையில் ஒன்றிய அழகுடையதாய் விளங்கும் உண்மைவடிவான ஞானவடிவனே; சண்முகநாதப்பெருமானே; நான் தத்தளிக்கின்றேன்; உனது தூய ஞானநிலையை நான் அடையும் எளிய ஒரு வழியை எனக்குக் கூறியருள்க. -5

6. பட்டதெலாம் போதும்இனிப் பாருலகின் மாயம்எனைப்
பற்றி டாமல்
நட்டதெலாம் வேரறுத்து நாதாந்தப் பேரொளியே
நவின்ற ஞானம்
தொட்டதெலாம் துலங்கஒரு சூட்சுமத்தை எனக்குரைத்துத்
துன்பம் தீராய்
சுட்டதெலாம் கோத்தணியும் சுடர்ஒளியின் இமைநடுவில்
தோன்றும் வேலா.

குறிப்புரை: மாயம் - மாயை. நட்டதெலாம் - நான்செய் வினைப்பயனை எல்லாம். நாதாந்தப் பேரொளி- ஞானநெறியாகிய ஒளி. சூட்சுமம் - நுட்பம். சுட்டதெலாம் - சுட்ட எலும்புகளை எல்லாம்.

பொழிப்புரை: சுட்ட எலும்புகளை எல்லாம் மாலையாகக் கோத்து அணியும் தீவண்ணனது கண்களுக்கு நடுவிலான கனல் வடிவுகொண்ட நுதற்கண்ணில் தோன்றிய வேலவனே; நான் அனுபவித்தவை எல்லாம் போதும், இவ்வுலக மாயம் என்னைப் பற்றாமல் இருக்க நான் செய்தவினைப் பயன்களின் வேரறுத்து, ஞானநெறியாகிய பேரொளி கூறும் ஞானத்தினால் நான் தொட்டன எல்லாம் விளக்கமுறச் செய்யும் நுட்பத்தை எனக்கு எடுத்துரைத்து என் துன்பம் தீர்த்தருள்க. -6

7. துட்டநெடு மாமாயை சூழ்ந்துமே வலித்து இழுத்துச்
சுற்றிக் கட்டிப்
பெட்டகத்தில் எனைஅடைத்துப் பேசிடா(து) இருத்திவிடில்
பேதை அந்தக்
கட்டதனைத் தரிப்பதற்குக் கருணைநீதி உன்னையல்லால்
கதியைக் காணேன்
இட்டமுடன் எனையழைத்து இறுக்கிவைத்த கட்டதனை
இளக்கு வாயே.

குறிப்புரை: துட்ட – அடங்காத் தன்மையுடைய. மா – கட்டு. வலிந்து இழுத்து – பலவந்தமாக ஈர்த்து. பெட்டகம் – பிறவி. கட்டு–பிறவித்தளை தரிப்பதற்கு – வெட்டி எறிய. இறுக்கிவைத்து – அழுத்தமாகக் கட்டியுள்ள. கட்டு – பிறவிக் கட்டு. இளக்குவாய் – நெகிழ்த்தி என்னை மீட்டருள்க.

பொழிப்புரை: கருணாநிதியே; அடங்காத் தன்மையுடைய பெரிய கட்டுதலில் வல்லமாயை என்னைச் சூழ்ந்து, பலவந்தமாக என்னை ஈர்த்துச் சுற்றிக் கட்டிப் பிறவிகளில் என்னை அடைத்து என்வாயையும் திறக்கஒட்டாது இருக்கச் செய்தால், அந்தத் தளையை வெட்டி எறிய உன்னைத்தவிர வேறு கதியறியேன். என்னை நீ விரும்பி அழைத்து, என்னை இறுகக்கட்டியுள்ள கட்டினை நெகிழ்த்தி என்னை மீட்டருள்க. -7

8. **உள்ளமது நைந்துருகி உனையடைந்தே உள்ளபடி**
உறுதி சொன்னேன்
கள்ளமது என்கருத்தில் கனவிலும்இல் லையா
கந்த வேளே
தெள்ளமுதம் எனக்களித்துத் திருநீற்றின் மகிமைதனைத்
தெரியக் காட்டி
வள்ளலுந்தன் திருவடியை மனதினிலே பூணுதற்கு
வலிமைதாராய்.

குறிப்புரை: தெள்ளமுதம் – தெளிவான விருப்பம். தெரிய – விளங்குமாறு. வலிமை – மனவலிமை. பூணுதற்கு – நிலையாக அணிந்து கொள்ள.

பொழிப்புரை: தலைவனே; கந்தவேளே; நான் என் உள்ளம் நைந்து உருகி உன்னையடைந்து உன்னிடம் உறுதியாகக் கூறுகிறேன். என் உள்ளத்தில் வஞ்சனையான எண்ணத்தை நான் கனவிலும் கூடக்

கருதவில்லை. உன்னருள் பெற வேண்டும் என்ற தெளிவான விருப்பத்தை எனக்கு அருளி, திருநீற்றின் பெருமையை எனக்கு விளங்குமாறு காட்டி, வள்ளலாகிய உனது திருவடியை நான் என் மனதில் நிலையாக அணிந்து கொள்ளக்கூடிய மனவலிமையை எனக்கு அருள்க. -8

9. **தாராயோ உன்கிருபை தனித்து இருந்துஓர் இடத்தேநான்**
தயங்கி டாமல்
காராயோ நெரியழிக்கும் கைவல்யப் பாலூட்டிக்
கசடன் என்பால்
வாராயோ வேல்எடுத்து வஞ்சனைகள் நெஞ்சகத்தே
மடிந்து மாளப்
பாராயோ ஏழைமுகம் பன்னிருகண் ஒளியாலே
பழநி வேலா

குறிப்புரை: தயங்கிடாமல் – தத்தளிக்காதபடி. காராயோ – காப்பாற்றமாட்டாயோ. நெரிஅழிக்கும் – பகையாகிய பயம் கெடுக்கும். கைவல்யப்பால் – சித்தியாகிய தகுதி. கசடன் – கீழ்மகன். மடிந்துமாள – கெட்டழிய. ஒளி – ஞானம்.

பொழிப்புரை: பழநியிலும் எழுந்தருளியுள்ள வேலவனே; உன் திருவருளை எனக்கு அருள மாட்டாயோ? தனியே ஓரிடத்தில் நான் இருந்து மனம் தளராதபடி கீழ்மகனாகிய என்னைக் காக்கமாட்டாயா? பகையாகிய மலத்தை அழிக்கும் சித்தியாகிய பாலூட்டி என் முன் வரமாட்டாயா? வேல்தாங்கி வந்து என் வஞ்சகமான உள்ளம் கெட்டழிய, உனது பன்னிருகண் ஞானநோக்கு அருளமாட்டாயா? அருள்க. -9

10. **எத்தனைநான் கொடியவினை செய்தாலும் என்பேரில்**
எதிர்த்தி டாமல்
பித்தன்என வாக்களித்துப் பரஞ்சோதி சுயரூபம்
பரப்பிக் காட்டி
அத்துவித வழிகி(து)என அருளிருத்தி அறியாமை
அறியும் வண்ணம்
சித்தமது வைத்(து)என்மேல் சிவரூபா திருவாக்கால்
தெரிவிப் பாயே

குறிப்புரை: எதிர்த்திடாமல் - நொந்து கொள்ளாமல். வாக்களித்து - கூறி. பரஞ்சோதி சுயரூபம் - மேலான ஒளிவடிவான உன் உண்மையுரு. பரப்பி - விரிவாக. அத்துவிதவழி - ஆன்மா ஆண்டவன் என்ற இரண்டல்லாத முத்திக்குரிய வழியை. அறியாமை - ஆணவம். சித்தமது வைத்து - திருவுளம் பற்றி. சிவரூபா - முத்தி வடிவானவனே.

பொழிப்புரை: முத்திவடிவானவனே; நான் எவ்வளவு பெரிய கொடிய வினைகள் செய்திருப்பினும் என்மேல் நொந்துகொள்ளாமல், என்னைப் பித்தம் பிடித்தவன் என்று கூறி, உனது மேலான ஒளி வடிவாகிய உன் உண்மை உருவத்தை விரிவாகக் காட்டி; ஆன்மா, ஆண்டவன் என்ற இரண்டல்லாத முத்திவழிஇது என்று உன்னருகில் என்னை இருக்கச் செய்து, என் ஆணவத்தை நானறியுமாறு செய்ய நீ திருவுளம் பற்றி என்னிடம் உனது திருவாக்கால் தெரிவித்தருள்க.

-10

பதிகம் 2

1. **வானவர்க்(கு) அரசே மறைமுதல் கடவுள்**
வழிபடும் கருணைவா ரிதியே
மோனவர்க்(கு) உரிய முத்தீசா தனத்தின்
முதல்வனே மூதறி(வு) அழிந்த

தானவர்க்(கு) அரசே சமர்தனில் செயித்த
சண்முகா தருமலர் கமழும்
கானகக் குயிலைக் கடிமணம் புனைந்த
கர்த்தனே ஆண்டருள் எனையே

குறிப்புரை: மோனவர் = ஞானியர். முத்திசாதனம் = முத்திதரும் கருவியாகிய ஞானம். மூதறிவு = ஞானம். தானவர் = அசுரர். அரசே = நல்வழியில் ஆள்பவனே. தரு = மரம். கானகக்குயில் = வள்ளி நாச்சியார். கருத்தன் = கடவுள்.

பொழிப்புரை: தேவர்களுக்கெல்லாம் தலைவனே; நான்முகன் வழிபடும் கருணைக் கடலே; ஞானியர்க்குரிய முத்திதரும் கருவியாகிய ஞானத்தின் முதல்வனே; ஞானமழிந்த அசுரர்களையும் நல்வழியில் ஆள்பவனே; அவர்களுடனான போரில் வென்ற ஆறுமுகனே; மரங்களின் மலர்கள் மணம் கமழும் குறிஞ்சிக்காட்டுக் குயிலாகிய வள்ளி நாச்சியாரை மணந்த கடவுளே என்னை ஆண்டருள்க.

-11

2. **மாசிலா மணியே மரகதச் சுடரே**
வளர்மதிக் கிரணமா முகத்துத்
தேசிகா உனது திருவடி யதனைத்
தினமும்என் அகத்தினில் பதித்துப்
பூசியே உனது தூயவெண் ணீற்றைப்
புல்லறி(வு) அதனையான் துடைத்து
வாசியால் மூல வழிதனில் செலவே
வரம் அளித்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: கிரணம்=ஒளி. தேசிகா=குருவே. புல்லறிவு=அற்ப அறிவு. வாசி=சுவாசம். மூலவழி=மூலாதாரவழி.

பொழிப்புரை: மாசேதும் இல்லா மாணிக்கமே; மரகதமணியின் ஒளியே; முழுமதியின் ஒளியொத்த முகமுடைய குருவே; உனது திருவடியை நாடோறும் என் மனத்தில் பதித்து, உனது தூய திருவெண்ணீற்றைப்பூசி, என் அற்ப அறிவை முற்றாகத் தீர்த்துச் சுவாசத்தின் மூலம் மூலாதாரவழியில் ஆறாதாரங்களில் சென்றேறி உன்னருள்பெற என்னை ஆண்டருள்க. -12

3. **கனிந்தமுக் கனியைக் கரும்பினைத் தேனைக்**
கபிலையின் பால்தனைக் கலந்தே
இனித்தசர்க் கரையைக் கற்கண்டின் பொடியை
இளம்பருப்(பு) அதனையும் சேர்த்தே
தனித்தநெய் யுடனே தெங்கின்பால் சேர்த்த
தனிச்சுவை அதனினும் இனிக்கும்
நனிப்பெரும் பழமே நாயகா மயிலை
நடத்திவந்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: கபிலை = காராம் பசு. நனிப்பெரும் பழம் = மிகச் சிறந்த பெரும்பழம்.

பொழிப்புரை: கனிவான வாழை பலா மாங்கனி, கரும்புச்சாறு, தேன், காராம்பசுவின் பால் ஆகியவற்றைக் கலந்து, இனிமையான சர்க்கரை, கற்கண்டின்தூள், முந்திரி, பாதாம், சாரைப் பருப்புகள் சேர்த்து, தூய நெய்யுடன் தேங்காய்ப்பாலும் சேர்ந்ததான சுவைமிக்க பொருளிலும் இனிக்கின்ற மிகச்சிறந்த பெரும்பழமாய் உள்ளவனே; தலைவனே மயில்மீதிலேறி அதனைச் செலுத்தி என் முன் வந்து என்னை ஆண்டருள்க.

4. **பொன்னகர்க்(கு) இறைவன் "புண்ணியா எனது**
புதல்வியைத் திருமணம் புனைந்தே
என்அகத்(து) அரிய மருகன்ஆ குக"என

இயம்பியே அடிதனில் இறைஞ்ச
தன்னகத்(து) இனிய மனையளாய் அவளைத்
தம(து)இடப் புறம்தனில் இருத்தும்
பன்னகா பரணன் பரவிய குகனே
படசம்வைத்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: பொன்னகர்க்கு இறைவன்=தேவருலகத்து அரசன் = தேவேந்திரன். பன்னகாபரணன்=பாம்பு ஆகிய அணிகலன் அணிந்த சிவபெருமான். பட்சம்=கருணை.

பொழிப்புரை: "புண்ணிய வடிவு கொண்டவனே; என் மகளாகிய தெய்வயானையைத் திருமணம் செய்துகொண்டு, என் மனதிற்குப் பிடித்தமான மருமகனாய் விளங்கவேண்டும்" என்று தேவேந்திரன் வேண்ட, அவரைத் தமது மனத்திற்கு இனிய மனைவியாய் ஆக்கிக்கொண்டு தமது இடப்பாகம் இருத்திக்கொண்டவனே; பாம்பணி அணிந்த சிவபிரானும் போற்றிய குகனே; கருணை காட்டி என்னை ஆண்டருள்க.
-14

5. **கொம்பினில் பரவும் குயில்குழாம் காற்றால்**
கொம்(பு)ஒடிந்(து) அலறுமா போல
நம்பியே அடியேன் மெலிந்(து) உழன்(று) உழன்று
வே(று) ஓர்ஆ தரம்இலா(து) உனையே
நம்பியே உனது நன்மலர்ப் பதத்தின்
நாதனே முறையும் இட்டேன்
அம்பிகா பதியின் தவப்பெருங் கனியே
ஆதரித்(து) ஆண்டருள் எனையே

குறிப்புரை: கொம்பு = மரக்கிளை. பரவும் = கூவும். ஆதரம் = ஆதரவு. அம்பிகாபதி = உமையவள் கணவனான சிவபெருமான். தவப்பெரும் = மிகப்பெரிய.

பொழிப்புரை: மரக்கிளையில் அமர்ந்து கூவும் குயில் கூட்டம், அக்கிளை காற்றினால் ஓடிய அலறுதல் போல, மனம் வெதும்பி அடியேன் மெலிந்து மனம் சுழன்று சுழன்று வேறுஒரு ஆதரவும் இல்லாது உன்னையே நம்பி, நாதனே உனது தாமரை மலர்போன்ற திருவடிகளில் முறையிட்டேன். உமையம்மையின் கணவனான சிவபெருமான் அருளிய மிகப்பெரிய கனியாய் விளங்குகின்றவனே. அன்பு காட்டி என்னை ஆண்டருள்க. -15

6. **ஆதியாய் நடுவாய் அந்தமாய் எங்கும்**
அருவமாய் உருவமாய் இலகும்
சோதியாய் வெளியாய்த் தூயமா மணியாய்த்
துப்(பு)உறச் சிவந்தபே ரொளியாய்
வீதியாய் ஞான விளக்குமாய் யாவுமாய்
மேவிவாழ் கின்ற குகனே
பேதியா(து) உனையே சந்ததம் தொழவே
பெற்றிதந்து ஆண்டருள் எனையே.

குறிப்புரை: இலகும் = விளங்கும். வெளி = பரவெளி. துப்புற = மேன்மை பொருந்த. வீதி = ஒழுங்கு. பேதியாது = மனம் வேறுபடாது.

பொழிப்புரை: எப்பொருட்கும் ஆதி, நடு, முடிவு ஆகி; எங்கும் அருவம், உருவம் கொண்டு விளங்கும் சோதியாகி, பரவெளியாகி, தூயபருமணியாகி, மேன்மை பொருந்தச் சிவந்த பேரொளியாகி, ஒழுங்குடைய ஒன்றாகி, ஞானவிளக்கமாகி, அனைத்துமாகி, அவற்றுள் பொருந்தி வாழ்கின்ற குகனே; உன்னை எப்போதும் மனவேறுபாடு சிறிதுமின்றி வணங்கும் இயல்பை எனக்கு வழங்கி என்னை ஆண்டருள்க. -16

7. **சிட்டனே பரையின் செல்வனே அடியர்**
தீமைதீர் சிறுவனே கொடிய
துட்டனா கியஆ ரேந்ரனைத் துடைத்த

தூயனே அடியனைச் சூழ்ந்த
கட்டம்யா வையும்நீ காற்றினில் பறத்திக்
கருணைமா மழைதனைப் பொழிந்து
இட்டமாய் இந்த நாளிலே சித்தம்
இரங்கிவந்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: சிட்டன் = அடியார்க்கு அடியன். பரை = பராசத்தி. சிறுவன் = இளையோன். கட்டம் = துன்பம். பறத்தி = பறக்கச்செய்து. இட்டம் = விருப்பம்.

பொழிப்புரை: அடியார்க்கு அடியவனே; பராசத்தியின் திருமகனே; அடியார் தீமைகளை ஒழிக்கும் இளையவனே; கொடிய துட்டனாகிய அரக்கர் தலைவன் சூரபன்மாவைத் தடிந்தாண்டவனே; அடியவனாகிய என்னைச் சூழ்ந்துள்ள துன்பங்கள் யாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு உன்கருணை மாமழையைப் பொழிந்து, மிக்க விருப்புடன் இந்நாளில் திருவுளம் இரங்கிவந்து என்னை ஆண்டருள்க. -17

8. **கற்றையம் சடையன் கண்ணினில் செனித்த**
கடவுளே கடையனேன் மருண்டு
இற்றைநாள் வரையில் அறிவிலா(து) இழிந்தே
ஏங்கியே கதியிலா(து) உனையே
பற்றினேன் கொடிய பாவியான் எந்தன்
பவம்அறுத்(து) அருள்தனைத் தேக்கி
முற்றுமே அடியேன் பரகதி பெறவே
முத்திதந்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: கண்ணுதல் = நுதற்கண் (இலக்கணப்போலி) = நெற்றிக்கண் பவம் முற்றுமே அறுத்து = பிறவிக்குக் காரணமான வினைமுழுதும் அறுத்து. பரகதி = வீடுபேறு.

பொழிப்புரை: சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் தோன்றிய கடவுளே; மிகக்கீழான நான் இந்நாள்வரை அறிவின்றி மருண்டு கீழ்ப்பட்டுத் திருவருள் பெற ஏங்கி, உன்னையன்றி வேறுகதி நோக்காது உன் திருவடிகளையே பற்றி வாழ்ந்தேன். கொடிய பாவி நான் எனினும் எனது பிறவியறுத்து உன்திருவருளை என் உயிரில் சேர்த்து அடியவனாகிய நான் மேலான வீடுபேறுபெற ஞானம் அருளி என்னை ஆண்டருள்க. -18

9. **முத்தனே முதல்வா மும்மையாய் அடியர்**
முன்வரும் குருபரா முதிர்ந்த
சித்தனே தேவர் தேவனே யோக
தீனனே தெரிவைமார் மருவும்
நித்தனே லோக நீதனே ஞான
நெறியனே நெறியிலேன் உனையே
நத்தினேன் அடியேன் அஞ்சல்என்(று) உரைத்தே
ஆதரித்(து) ஆண்டருள் எனையே.

குறிப்புரை: முத்தனே = இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனே; மும்மை = அரு, அருவுரு, உரு என்ற முந்நிலை. சித்தன் = ஞானி. யோகதீனன் - யோகியர்க்கு எளியவன். தெரிவைமார் = வள்ளி தெய்வானையர். நித்தன் = அழிவற்றவன். நீதன் = நீதிமான். நத்தினேன் = விரும்பினேன்.

பொழிப்புரை: இயல்பாகவே பாசங்களின் நீங்கியவனே; முதல்வனே, அரு, அருவுரு, உரு ஆகிய மூன்று நிலைகளில் அருள்புரிகின்றவனே; அடியார்க்கு அருள முன்வரும் மேலான குருவே; முதிர்ந்த ஞானியே; தேவர்களுக்கெல்லாம் தேவனே; யோகியர்க்கு எளியவனே; வள்ளி தெய்வானை அம்மையர் மருவும் அழிவற்றவனே; உலக நீதிமானே; ஞான நன்னெறிக்கு உரியவனே; நன்னெறி நில்லாத நான் உன்னையே விரும்பினேன்; அடியேனை அஞ்சாதே என்று அருளி அன்புகாட்டி என்னை ஆண்டருள்க. -19

10. **பூவினால் தொடையல் தொடுத்(து)உனக்(கு) அணியில்**
பூவது வாடிடும் எனவே
பாவினால் மாலை பாடியே பணிந்து
பணிந்(து)உனைப் போற்றினேன் பரனே
தேவிமார் இருவர் சூழவே மயிலில்
தீருவடி ஊன்றியே ஏறித்
தாவியே சதங்கை ஆர்க்கும்உன் பதத்தைத்
தந்துநீ ஆண்டருள் எனையே.

குறிப்புரை: தொடையல் = மாலை. பரனே = மேலானவனே. பதம் = திருவடி.

பொழிப்புரை: மேலானவனே; பூமாலை தொடுத்து உனக்கு அணிவித்தால் அது வாடிவிடும். ஆதலால் பாமாலை பாடிப் பணிந்து பணிந்து உன்னைப் போற்றினேன்; வள்ளி தெய்வயானை அம்மையர் சூழ திருவடி ஊன்றி மயிலில் தாவி ஏறும்போது சதங்கை ஆரவாரிக்கும் உனது திருவடியைத் தந்து நீ என்னை ஆண்டருள்க. -20

பதிகம் - 3

1. **கூற்றுவன் பாசம் எதிர்வரக் கண்டு**
குலையது துடிதுடித் திடுநாள்
மாற்றுவர் உளரோ மருந்(து)உனை அல்லால்
மரகத மணிவிளக்(கு) ஒளியே
நோற்றலைத் தவிர்த்த கொடியனேன் தனக்கு
நும்பதி அளித்தருள் சுரந்து
ஆற்றலைத் தவிர்த்(து)ஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: நோற்றல் = தவம்புரிதல். ஆற்றல் = சகித்து = பொறுத்துக் கொண்டிருத்தல்.

பொழிப்புரை: ஆறுமுகம் ஆன ஒளிவடிவனே. காலன் பாசத்துடன் என்னைப் பிணிக்க எதிர்வரும்போது கண்டு குலை துடிக்கும் அந்த நேரத்தில், அவனைத்தடுத்து அதனைமாற்றுகின்றவர் உன்னைத்தவிரப் பிறர்யாரும் இல்லை. மரகத மணிவிளக்கின் ஒளியானவனே; தவம்புரிதலைத் தவிர்த்த கொடியவனாகிய எனக்குக் கருணை காட்டி நும் திருவடிப்பேற்றை அருள்க. நான்படும் துன்பத்தைக் கண்டும் காணாததுபோல் நீ சகித்துக் கொண்டிருத்தலை விடுத்து என்னை ஆட்கொள்ளவருக. -21

2. பிறர்பொருள் பறித்து வைத்திடும் இருப்புப்
பெட்டியை நீலைன மதித்துச்
சரம்எனும் அனங்கன் கணையினால் மெலிந்து
தையலர் சதமென விழைந்து
துறவினில் துணிய வழிதனை அறியாத்
துர்க்குணம் அதுதனைத் தவிர்த்தே
அரவணி சுதஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: சரம் = ஐந்து. சதம் = அனைத்தும். துறவினில் துணிய = துறவு மேற்கொள்ள. சுத = நன்மையேவடிவானவனே.

பொழிப்புரை: பாம்பணிகலன் பூண்ட நன்மையே வடிவான சிவமே; ஆறு திருமுகங்கள் கொண்ட குருவே; பிறர் செல்வத்தைக் கவர்ந்து பாதுகாத்து வைக்கும் இருப்புப்பெட்டியே நிலையானது என்று கருதி, மன்மதனின் ஐவகையிலான அம்புகளால் மனம் உடல் மெலிந்தும் பெண்ணின்பமே அனைத்திலும் இனியது என்று விரும்பினேன். இவற்றைத்துறக்கும் துறவுநிலை மேற்கொள்ள உரிய நெறியறியாத தீயகுணத்தை என்னிடமிருந்து நீக்கி என்னை ஆட்கொள்ளவருக.

முருகன் வேறு சிவம் வேறு என்பதில்லை; இருவரும் ஒருவரே என்ற ஸ்ரீகச்சியப்ப சிவாசாரியார் போன்ற அருளாளர் கருத்தை

உட்கொண்டு முருகனை "அரவணி சுத" என்று அழைத்தார். -22

3. நீரில் குமிழிமின்என அழிந்து
நிலையிலா(து) எங்கணும் பரவிச்
சேரிடம் இ(து)என்(று) அறிந்திடா(து) அலைந்து
தீயரைச் சேர்கின்ற பொருளைக்
கோரியே அடியேன் கொடுமைகள் புரிந்து
குருடனாய் இதுவரை உழன்றேன்
ஆரில்ஆர் குகஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: மின் = மின்னல். பொருள் = செல்வம். கோரி = விரும்பி. ஆரில் = உலகில். ஆர் = நிறைந்து.

பொழிப்புரை: ஆறு திருமுகங்கள் கொண்ட குருவே; நீரில் தோன்றும் குமிழி போலவும், மின்னல் போலவும் நிலையின்றி உடன் அழிவது செல்வம். தான்சேரவேண்டிய இடம் இதுவாகும் என்று அறியாமல் தீயவர்களைச் சேர்கின்ற செல்வத்தை விரும்பி நான் கொடுமைகள் செய்து நல்லதைக் காணாத குருடனாய் இதுவரை துன்புற்றேன். உலகெங்கும் நிறைந்த குகனே; என்னை ஒதுக்காது ஆட்கொள்ள வருக. -23

4. மின்னினைப் பழிக்கும் மேனியும் வானின்
மேகத்தைப் பழிசெயும் கூந்தல்
பொன்னினைப் பழிக்கும் காந்தியோர் ஆய
பூவைமார் மயல்தனில் படிந்து
நல்நினைவு அனைத்தும் நாடிடா(து) அகன்று
நாதனே மனம்மிக மெலிந்தேன்
அல்நினைப்(பு) அறுத்(து) ஆட்கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: மின் = மின்னல். காந்தியோர் - ஒளியுடையவர். பூவைமார் = பெண்டிர். படிந்து = தோய்ந்து. அல்நினைப்பு = கூடாநினைப்பு.

பொழிப்புரை: தலைவனே, ஆறுதிருமுகங்கொண்ட குருவே; மின்னலைப் பழிக்கும் உடம்பும் வானத்து மேகத்தைப் பழிக்கும் கூந்தலும், பொன்னைப் பழிக்கும் ஒளியும் உடையவராகிய பரத்தைப் பெண்டிரின் காமவலையில் பட்டுத் தோய்ந்து, நல்லநினைவுகள் எந்த ஒன்றையும் விரும்பாது ஒதுங்கி, மனம் மிக நொந்தேன். எனது கூடாநினைவுகளை வேரோடு அறுத்து என்னை ஆட்கொள்ளவருக. -24

5. **இன்நிலத்தினை ஆண்டவர் எவர்களுமே**
ஈசனே கைக்கொளா(து) இறந்தார்
என்னினைப் பினில்சதம் எனநினைந்ததனால்
ஏங்கியான் மனம்மிக மெலிந்தேன்
நன்னினைப் பதனைப் பரிவுடன் இரங்கி
நாதனே எனக்(கு)அருள் புரிந்து
அன்னையை ஒப்பஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: கைக்கொளாது, உன்னைப் பேணிக் கொள்ளாமல், ஈசனே, எப்பொருட்கும் இறைவனே. சதம் = அழியாதவன்.

பொழிப்புரை: எப்பொருட்கும் இறைவனே; ஆறுதிருமுகங்கள் கொண்ட குருவே; இனியநிலவுலகை ஆட்சிபுரிந்த யாரும் உன் நினைப்பை இடைவிடாது மேற்கொள்ளாமையால் இறந்தனர்; ஆனால் என் நினைப்பில் நான் அழியாதவன் என்று நினைந்து ஏங்கி மனம் மிக இளைத்தேன். எனக்கு நல்ல நினைப்பை என்மீது பரிவுடன் அருள்புரிந்து தாய்போல் என்னை ஆட்கொள்ள வருக. -25

6. **பொய்யினைச் சுமந்த புலையனேன் எனது**
புந்தியில் அறிவிலா(து) அழிந்து
மெய்யினைப் பகரப் பலர்எனை அடுத்து
வேண்டினும் பகரிலேன் தனது
கையினை வலிய குட்டையில் நுழைத்த
காளையர் எனமிகக் கலங்கும்
ஐயனே எனைஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே

குறிப்புரை: புலையன்=கீழ்மகன். பகர=கூற. குட்டை=தொழுமரம்.

பொழிப்புரை: தலைவனே; ஆறுதிருமுகங்கள் கொண்ட குருவே. என் புத்தியில் அறிவு இல்லாமல் முற்றாக அறிவு அழிந்துபோனதால் பொய்யினையே சுமந்த கீழ்மகன் ஆகிய என்னிடம் பலர் நெருங்கிவந்து மெய்கூற வேண்டினும் நான் கூறவில்லை. தனது கைகளை வலிமையான தொழுமரத்தில் நுழைத்துக் கட்டுண்ட காளையரைப் போல் மிகவும் கலங்கும் என்னை ஆட்கொள்ள வருக. -26

7. **கொல்லுவேன் உயிரைக் கொன்றுமே நிணத்தைக்**
கொணர்ந்தும்என் மனமது களிக்கப்
புல்லுவேன் மதுவைப் பொருந்துவேன் அருந்தப்
பொதுவுளார் அதைமறுத் திடிலோ
சொல்லுவேன் நிந்தை மனம்மிகக் கடுத்துத்
தூறுவேன் துதிசெயேன் எனைஅவ்
அல்லலை அறுத்(து)ஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: நிணம் = புலால். புல்லுவேன் = தின்பேன். பொருந்துவேன் = பருகுவேன். பொது = துணை. கடுத்து = சினந்து. தூறுவேன் = பழி தூற்றுவேன்.

பொழிப்புரை: ஆறுதிருமுகங்கள் கொண்ட குருவே; உயிரைக் கொல்லுவேன்; கொன்றதன் புலாலைக் கொண்டுவந்து என் மனம் களிப்புற அதனைத் தின்பேன்; மதுவும் குடிப்பேன்; நான் குடிப்பதை எனக்குத் துணையான நல்லோர் குடிக்கக்கூடாது என்று மறுத்துக் கூறினால் அங்ஙனம் கூறியவர்களையும் பழித்துக்கூறுவேன்; நான் மனம்மிகச் சினந்து தூற்றவும் செய்வேன்; அவர்களைப் போற்றிக் கூறவும் மாட்டேன்; இத்துன்பங்களை எல்லாம் அறுத்து என்னை இவற்றினிடமிருந்து தடுத்து ஆட்கொள்ள வந்தருள்க.

-27

8. **தேடிடா(து) உனையே தீயன் என்கருவித்**
திரம்இலா மனமது தன்னிலே
நாடிடா(து) உழன்று நாய்எனத் தீரிந்து
நான்எனும் அகந்தையால் நிதமும்
பாடிடாது உனது புகழ்தனை மறந்து
பற்றினேன் இத்திதி மயிலில்
ஆடியே எனைஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: கருவி = செருக்குடைய நான். திரம் = உறுதி. அகந்தை = ஆணவம். இத்திதி = இச்சமயம்.

பொழிப்புரை: ஆறு திருமுகங்கள் கொண்ட குருவே; உன்னை நான் தேடாமலும், தீயனாய் செருக்குடைய நான் உறுதியில்லாத என் மனத்தால் நாடாமலும் துன்புற்று, நான் என்ற ஆணவமாகிய அகப்பற்றுக் காரணமாக நாடோறும் உன்புகழ் பாடாமலும், மறந்தும் வாழ்கின்றேன். இச்சமயத்தில் ஆடு மயில்மீது ஏறி என்னை ஆட்கொள்ள வருக. -28

9. **தேன்உ லாவிய மலர்க்கடம் பணிந்த**
சேவகா அசுரரைச் சயித்து
மீன்உ லாவிய கண்ணினாள் ஆய
மெல்லியாள் தனைமணம் புரிந்து
கான்உ லாவிய குறத்தியைக் கருதியே
காதலால் அணைந்தவா எனைநீ
ஆன்உ லாவிஆட் கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே.

குறிப்புரை: சேவகன் = வீரன். கான் = காடு. ஆன்உலாவி = இடந்தொறும் உலாவி. ஆன் = தொறுப்பொருளில் வந்த இடைச்சொல். உயிர்எனினும் ஆம்.

பொழிப்புரை: ஆறு திருமுகங்கள் கொண்ட குருவே; தேன்மணக்கும் கடம்ப மலர் மாலையணிந்த வீரனே; அசுரர்களை வென்று கெண்டை மீன் உலாவுவதுபோன்ற கண்களையுடைய தெய்வயானை அம்மையைத் திருமணம் புரிந்து கொண்டு; குறிஞ்சிக் காட்டில் உலாவிய குறத்தியாகிய வள்ளிநாச்சியாரையும் விரும்பி மணந்து அணைந்தவனே; நீ இடந்தோறும் உலாவி - உயிரில் உலாவி என்னை ஆட்கொள்ள வருக. - 29

10. **சரவ ணத்(து)அமரும் காங்கேயா அறுவர்**
தனமதை அருந்தியே வளர்ந்து
பரவ சத்தனாய்ப் பாலனாய் உலகில்
பற்றியே கோயில்கொண்(டு) அருளும்
குரவர் சுற்றனே குமரனே வருக
குருபரா அறுமுகா குகனே
அரக ராஎனை ஆட்கொண்டிட வருவாய்
அறுமுகம் ஆனதே சிகனே

அச்சிட்டோர்:
விடெக் கம்ப்யூட்டர்ஸ்
உத்தமர் கோவில், திருச்சி-621 216.
போன்: 0431-2591490, 94871 92473